## சிவகங்கை மாவட்டத்தில் – ‘கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம்’!

## தஞ்சாவூர் மாவட்டத்தில் – “மனோரா” நினைவுச் சின்னம்: முதல்வர் திறந்து வைத்தார்!

# ஈரோடு மாவட்டத்தில் ‘நொய்யல்’ அருங்காட்சியகம்! இராமநாதபுரம் மாவட்டத்தில் ‘நாவாய்’ அருங்காட்சியகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 13.02.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் தமிழ்நாட்டின் வைகை நதிக்கனரயில் சங்ககால நகர நாகரிகத்தின் ஆய்வுக்கூடமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீழடி தொல்லியல் தளத்தினை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவில், இரண்டு காட்சிகூடங்களுடன் 24 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கீழடியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நிதி மற்றும் சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி, சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா,சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் / தொல்லியல் துறை ஆணையர் த. உதயச்சந்திரன், தொல்லியல் துறை அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, பிப்.15-**

**சிவகங்கை மாவட்டத்தில் ரூ.24.30 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.2.75 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள ‘மனோரா’ நினைவுச் சின்னத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் புதுப்பொலிவுடன் கூடிய கட்டட முகப்பு விளக்குகளின் செயல்பாடுகள் ஆகியவற்றைத் திறந்து வைத்து,**

**ஈரோடு மாவட்டத்தில் ரூ.33.19 கோடி செலவில் கட்டப்படவுள்ள ‘நொய்யல்’ அருங்காட்சியகம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.34.55 கோடி செலவில் கட்டப்படவுள்ள, ‘நாவாய்’ அருங்காட்சியகம் ஆகிய வற்றிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 13.02.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் தமிழ்நாட்டின் வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகத்தின் ஆய்வுக்கூடமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீழடி தொல்லியல் தளத்தினை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவில், 65,380 சதுர அடியில் இரண்டு காட்சிகூடங்களுடன் 24 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம்; தஞ்சாவூர் மாவட்டம், சரபேந்திர ராஜபட்டினம் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள மனோரா நினைவுச் சின்னத்தில் 2.75 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள கட்டட முகப்பு விளக்குகளின் (Faade Lighting) செயல்பாடுகளை திறந்து வைத்தார். மேலும், ஈரோடு மாவட்டம், கருமாண்டி செல்லிபாளையத்தில் 33.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நொய்யல் அருங்காட்சியகம், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் 34.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நாவாய் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு 15 இலட்சம் ஆண்டுகள் மனித குல வரலாற்றுத் தொன்மை கொண்ட நிலப் பரப்பாகும். தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வுகளில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு மேற் கொண்ட அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வு முடிவுகள் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றில் புதிய வெளிச்சம் ஏற்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வு, தொல்லியலாளர்கள் இடையே மட்டுமின்றி உலகத் தமிழர்கள் இடையேயும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்ச் சமூகமானது, கி.மு. ஆறாம் நூற்றாண்டில் படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கரிமப் பகுப்பாய்வுகளின் முடிவுகள் வாயிலாக உறுதிபடுத்தப்பட்டுள்ளது. பொருநை ஆற்றங்கரை நாகரிகம், 3200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதை சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற நெல் உமியினை பகுப்பாய்வு செய்ததன் வாயிலாக உறுதி செய்ய முடிகிறது. மேலும், சிவகளை அகழாய்வில் கிடைத்த அறிவியல் காலக்கணக்கீடுகள் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தொழில்நுட்பம் தமிழ் நிலப் பரப்பில் அறிமுகமாகியுள்ளது என்பதை உறுதிசெய்தன.

அண்மைக்கால தொல்லியல் சாதனைகள் மூலம் நமது புகழ்பெற்ற, நீண்ட வரலாற்றில் காணும் பண்பாடு மற்றும் கால வரிசை இடைவெளிகளை நிரப்புவதற்கு நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும். இறுதிசெய்யப்பட்ட இலக்குகளை அடைவதற்காக தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல், வரலாற்றுக் காலம் வரையிலான தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்வதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

### கீழடி அகழாய்வு!

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் கீழடி கிராமம் அமைந்துள்ளது. மதுரை இராமேஸ்வரம் பெருவழிப் பாதையில் மதுரையில் இருந்து சுமார் 12 கி.மீ தொலைவில் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. கீழடி கிராமம் அமைந்துள்ள பள்ளிச்சந்தை திடலில் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் அகழாய்வு நடைபெற்று வருகிறது. இந்திய தொல்லியல் துறை முதலில் 2014, 2015, 2016 ஆகிய மூன்று ஆண்டுகள் அகழாய்வு மேற்கொண்டு 7,818 தொல்பொருட்களும், கட்டுமானப் பகுதிகளும் சங்ககால மக்கள் வாழ்ந்ததற்கானச் சான்றுகளும் வெளிப்படுத் தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 2017 முதல் 2025 வரை ஏழு பருவங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அகழாய்வு மேற் கொள்ளப்பட்டு 13,000க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள் ளன. 2026ஆம் ஆண்டுக்கான பதினொன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

### கீழடியின் முக்கியத்துவம்!

கீழடியில் 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நான்காம் கட்ட அகழாய்வின் போது சேகரிக்கப்பட்ட ஆறு கரிம மாதிரிகள், அமெரிக்க நாட்டின் புளோரிடா மாகாணம், மியாமி நகரத்தில் அமைந்துள்ள, பீட்டா பகுப்பாய்வு ஆய்வுகூடத்திற்கு (Beta Analytic Testing Laboratory) அனுப்பப்பட்டு பெறப்பட்ட காலக் கணக்கீடு ஆய்வறிக்கையின்படி வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம் 2600 ஆண்டுகள் பழைமயானது எனத் தெரிய வருகிறது. தமிழ்நாட்டில் நகரமயமாதல் கி.மு.3ஆம் நூற்றாண்டளவில்தான் தொடங்கியது என்ற கருதுகோள்களுக்கு பதிலளிக்கும் வகையில் கி.மு.6ஆம் நூற்றாண்டில் வடஇந்தியாவின் கங்கை சமவெளிப் பகுதியில் நகரமயமாதல் தொடங்கியகாலகட்டத்திலேயே தமிழகத்திலும் நகரமயமாதல் தொடங்கியுள்ளது என்பது தெளிவு.

இதுவரை தமிழி எழுத்து வடிவத்தின் காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு என அழகன்குளம், கொடுமணல், பொருந்தல் ஆகிய அகழாய்வுகளின்படி கருதப்பட்டு வந்தது. தற்போதைய கீழடி ஆய்வுகளின்படி தமிழியின் காலகட்டம் கி,மு. 6ம் நூற்றாண்டு என இன்னும் ஒரு நூற்றாண்டு பின்னோக்கி தள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மரபினை பெருமையுடனும் பெருமிதத்துடனும் புரிந்து கொள்வதற்காகவும், தற்போதைய அறிவை மேலும் மெருகூட்டவும், தெளிவுபடுத்தவும் அறிஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வைகை நதிக்கரை நாகரிகத்தின் சான்றுகளை அறிவியல் அடிப்படையில் வெளிச்சமிட்டு காட்டும் வகையில் உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளன.

### கீழடி அருங்காட்சியகம்!

முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி அருங்காட்சியகத்தினை 5.03.2023 அன்று திறந்து வைத்தார். தென்னிந்தியாவில் நிலவிய சங்க காலப் பண்பாட்டு வரலாற்றாய்வில், கீழடி ஒரு திருப்புமுனை ஆகும். 2600 ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழர் பண்பாடு மற்றும் நகர நாகரிகத்தினை வெளிச்சமிட்டு காட்டியுள்ள கீழடி அகழாய்வின் மூலம் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் கொண்டு ஓர் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்தினை வருங்கால தலைமுறையினர், மாணவ மாணவியர், அறிஞர்கள், தொல்லியல் வல்லுநர்கள் மற்றும் அயல்நாட்டு அறிஞர் பெருமக்கள் அறியும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு, இந்நாள் வரை 12,55,000க்கும் மேற்பட்ட பார்வையாளர் கீழடி அருங்காட்சியகத்தினை பார்வையிட்டுள்ளார்கள்.

### கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் திறப்பு!

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் கீழடி கிராமம் மதுரைக்கு தென்கிழக்கே 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கீழடி அகழ்வாராய்ச்சி தளமானது அக்கிராமத்தின் பசுமை நிறைந்த தென்னத் தோப்பினுள் அமையப்பெற்றுள்ளது.

கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளை 23.01. 2025 அன்று முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

கீழடி கிராமத்தில் 24.30 கோடி ரூபாய் செலவில் சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவில் 65,380 சதுர அடியில் இரண்டு காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத்தின் மேற்கட்டுமானமானது முன் வடிவமைக்கப்பட்ட என்ற மையகருத்தினை அடிப்படையாகக் கொண்டு எஃகு கம்பிகளால் (Pre Engineered Buildings Steel Structure) வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் மேற்கூரையானது மங்களூரு தட்டு ஓடுகள் மற்றும் கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் இரண்டு காட்சிக்கூடங்களும் 80 மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ளதால். அவைகள் இணைப்புதாழ்வாரம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. சுமார் 48 சதுர அகழாய்வுக் குழிகள், பல்வேறு கட்டமைப்புகள் மற்றும் தொல்பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. உறைகிணறு, செங்கல் சுவர்கள், கூரை ஓடுகள், மட்பாண்டங்கள், இரும்பு மற்றும் தமிழி எழுத்துக்கள் பொறிக் கப்பட்ட மட்கலன்கள் கிடைக்கப்பெற்று அவைகளும் அங்கே காட்சிப்படுத் தப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டம், ஐந்தாம் கட்டம் மற்றும் ஆறாம் கட்ட கீழடி அகழ்வாய்வில் சங்ககால தொழிற்கூடங்களுக்குரிய செங்கற்கட்டுமானங்கள், சுடுமண் உறைகிணறுகள், சுடுமண் குழாய்கள் மற்றும் சுடுமண் சுருளைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் பானைகள், பானை ஓடுகள், சேமிப்பு கலன்கள் மற்றும் இதர தொல்பொருட்கள் கிடைக்கப்பெற்று கீழடி அருங்காட்சியகத்தில் காட்சிக்குவைக்கப்பெற்றுள்ளன. இத்தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட இடமானது, சீரமைக் கப்பட்டு மக்கள் பார்வைக்காக திறந்த வெளி அருங்காட்சி யக் கூடமாக அமைக்கப் பட்டுள்ளன.

கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்தில் பார்வையாளர்களின் பயன்பாட்டிற்காக குடிநீர், கழிவுநீர் வசதி, புல்வெளிகள் மற்றும் தோட்டங்கள், தீயணைப்பு சாதன வசதிகள் போன்ற பல்வேறு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அருங்காட்சியகத்திற்கு வரும் பார்வையாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்காக வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது.

கீழடி தொல்லியல் தளம், தமிழ்நாட்டின் தொல்பொருள் உலகில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதன் மூலம் நாம் பழங்கால வாழ்க்கை முறை, பண்பாடு மற்றும் சமூக அமைப்புகளைப் பற்றி புதிய புரிதல் பெற்று, தொல்லியல் ஆய்வுகளில் முக்கியமான வளர்ச்சியை நோக்கி முன்னேறக் கூடியதாக இருக்கின்றது. மேலும் இவ்வரலாற்று சிறப்பு மிக்க தொல்லியல் அகழாய்வுத் தளம் மக்கள் பார்வைக்காக சர்வதேச தரத்தில் திறந்தவெளி அருங்காட்சியமாக அமைக்கப்பட்டுள்ளது.

### மனோரா நினைவுச் சின்னம் – தஞ்சாவூர் மாவட்டம்!

2024-2025 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா, கலை பண்பாடு துறை மானியக் கோரிக்கையில் “தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சரபேந்திர ராஜபட்டினம் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள மனோரா நினைவுச் சின்னத்திற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் உட்கட்டமைப்பு மற்றும் முகப்பு விளக்குகள் அமைத்திடும் பணிகள் ரூ.2.75 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்” என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

1993ஆம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட சின்னமாக பாதுகாக்கப்பட்டு வரும் மனோரா நினைவுச் சின்னம் 75 அடி (22.30 மீ) உயரத்துடன் எட்டு அடுக்குகளைக் கொண்டதாகும். அறுகோண அமைப்பில் கட்டப்பட்டுள்ள இதனைச்சுற்றி பெரிய அகழி ஒன்றும், அதையடுத்து மதில்சுவரும், காணப்படுகின்றது. ஒரு கோட்டையின் அமைப்பில் காணப்படும் மனோரா, முற்காலத்தில் கலங்கரை விளக்கமாகவும் செயல்பட்டுள்ளது. தற்போது மனோரா நினைவுச் சின்னத்தில் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புதுபொலிவுடன் நவீன கட்டட முகப்பு விளக்குகள் (Faade Lighting) ஆகிய பணிகள் 2.75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### நொய்யல் அருங்காட்சியகம்! ஈரோடு மாவட்டம்

முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் 13.3.2024 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், நொய்யல் ஆற்றின் வடகரையில் கொடுமணல் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல் பொருட்களை அடுத்த தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்திட ஈரோடு மாவட்டத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொல்லியல் துறை மூலம் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

பதிற்றுப்பத்தில் கொடுமணம் என்றழைக் கப்பட்ட கொடுமணலில் நான்கு கட்டங்களாக நிகழ்ந்த அகழ்வாய்வுகளின் போது, இரும்பால் ஆன ஈட்டி முனைகள், வாள்கள், இரும்பு எஃகு உருக்காலை, சங்கு வளையல்கள், குறியீடுகள், தமிழி எழுத்துக்களைக் கொண்ட மட்பாண்டங்கள், அரிய கல்மணிகள் செய்யும் தொழிற்சாலை, நூல் நெய்வதற்கான தொழிற்சாலைகள் போன்றவை பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டன. உரோமப் பேரரசில் புழங்கிய பொன் மற்றும் வெள்ளி நாணயங்கள் சிலவும் கிடைத்தன. மேலும், செப்பால் ஆன புலிச் சின்னமும், இருபுறமும் கல் படிக்கட்டுகளுடன் கூடிய கிணறு ஒன்றும் முக்கிய கண்டுபிடிப்பாக உள்ளது. கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள் வெள்ளி முத்திரை நாணயங்கள், ரௌலெட்டட் மட்பாண்டங்கள் என கொடுமணல் வெளியுலகத்துடன் கொண்டிருந்த வணிக உறவை இவை சுட்டிக் காட்டுகின்றன.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருமாண்டி செல்லிபாளையம் ஊரில் 5.98 ஏக்கர் பரப்பளவில் 33.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நொய்யல் அருங்காட்சியகத்திற்கு முதலமைச்சர் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

### நாவாய் அருங்காட்சியகம்! இராமநாதபுரம் மாவட்டம்

2024-2025 ஆம் ஆண்டிற்கான தொல்லியல் துறை மானியக் கோரிக்கையில், இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் தொல்லியல் தளம், வைகை ஆற்றின் கரையில் வங்காளவிரிகுடா கடற்கரைக்கு அண்மையில் அமைந்துள்ளது. இத்தளத்தில், தொல்லியல் துறை 10 ஆண்டுகள் விரிவான அகழாய்வு மேற்கொண்டது. இந்த அகழாய்வுகளின் முடிவுகள் உரோம நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான வணிகத் தொடர்பினை உறுதி செய்துள்ளன. அழகன்குளத்தில் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உள்ளடக்கிய புதியதாக அருங்காட்சியகம் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் 34.55 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள நாவாய் அருங்காட்சியகத்திற்கு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

### தமிழ்நாட்டின் பாறை ஓவியங்கள்“ (Rock Art of Tamil Nadu)

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பேராசிரியர் கா. ராஜன் மற்றும் முனைவர் இரா. சிவானந்தம் ஆகியோர் எழுதிய தமிழ்நாட்டின் பாறை ஓவியங்கள் “Rock Art of Tamil Nadu” என்ற நூலினை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள 46 பாறை ஓவியத் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆவணப்படுத்தலின் விளைவாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, தொல்லியலாளர்கள், நாட்டுப்புறவியலாளர்கள், மானுடவியலாளர்கள். நிலவியலாளர்கள். கலை வரலாற்றாசிரியர்கள் மற்றும் தொல்பழங்கால சூழலியலாளர்கள் ஆகிய பல்துறை ஆய்வாளர்கள் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. குழுவினர்கள் சேகரித்த தகவல்களும், விளக்கங்களும் ஒருங்கிணைந்த அறிவுசார் படைப்பாக இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன.

பாறை ஓவியங்களின் பண்பாட்டுச் சிறப்பை மதிப்பாய்வு செய்வதற்கு உதவும் வகையில், இந்நூலில் நிழற்படங்கள். வரைபடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது, கடந்த கால மக்களின் சமூக வாழ்க்கையை பிரதிபலிப்பதோடு, அவர்களின் உள்ளுணர்வு, சிந்தனைத் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. பாறை மேற்பரப்புகளில் வரையப்பட்ட இக்காட்சிகள், கலை மீது கொண்டிருந்த அவர்களின் மதிப்பையும், சமூக ஒற்றுமையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இந்நூல் மொத்தம் 734 பக்கங்களை கொண்டதாகும். இதில் 92 நிலப்படங்கள் 682 வண்ண நிழற்படங்கள் மற்றும் 528 கோட்டுருவ வரைபடங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், கீழடியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி, சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் / தொல்லியல் துறை ஆணையர் த. உதயச்சந்திரன், தொல்லியல் துறை அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.